பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 11 2024 7 15

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரயாக்ராஜில் நடைபெற உள்ள மஹாகும்பமேளாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொள்ள உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் அழைப்பு விடுத்துள்ளார்.

2. ஆஸ்திரேலியா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், குயின்ஸ்லேண்ட் பல்கலைக்கழகத்தின் வேந்தரான பீட்டர் வர்கீசினை பிரிஸ்பேனில் சந்தித்து உரையாடினார்.

3. வளர்ச்சியடைந்த பாரதம் திட்டத்தின்கீழ் இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 334 ரயில் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவை விலக்கிக்கொள்ள இன்று கடைசி நாளாகும்.

5. தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி இன்று சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற இருக்கும் மஹா கும்பமேளாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பிஜேபியின் தலைவர் திரு. ஜே.பி. நட்டா ஆகியோர் கலந்துகொள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிற்பகல் பிரதமர் திரு. நரேந்திர மோடி மறந்றும் திரு. ஜே.பி. நட்டாவை சந்தித்த அவர், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதி தொடங்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மஹா கும்பமேளா அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி மஹா சிவராத்திரி தினத்தில் நிறைவு பெறுகிறது.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள ஜார்கண்ட் மாநிலத்தில் பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காலை மணி 11.30க்கு **Garhwa** நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

பின்னர் மாலை 3 மணிக்கு **Chaibasa** மாவட்டத்தில் நடைபெறும் பிரச்சாரத்தில் அவர் பங்கேற்பதாக பிஜேபி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. பாபுலால் மராண்டி தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அங்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி முதல் முறையாக பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், குயின்ஸ்லேண்ட் பல்கலைக்கழகத்தின் வேந்தரான பீட்டர் வர்கீசினை பிரிஸ்பேனில் சந்தித்து உரையாடினார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கு இடையிலான கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில் ஒத்துழைப்பு குறித்து விவாதித்ததாக டாக்டர் ஜெய்சங்கர் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதம் திட்டத்தின்கீழ் ரயில் நிலையங்களை மேம்படுத்தும் பணியில் இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 334 ரயில் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் ரயில்வே பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

கோழிக்கோடு ரயில்வே நிலையத்தை ஒட்டி தகவல் தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**Angamali – Erumeli** இடையே சபரி வழித்தடத்தை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மங்களூர் - **Shornur** இடையே மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

**Shornur - Kanyakumari** இடையே மூன்றாவது வழித்தடம் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு, மக்கள் நலனை கருத்தில் கொண்டு ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

பின்னர் கோவை ரயில் நிலையம் வந்த அவரிடம், தமிழகத்தின் மேற்கு மண்டலங்களில் ரயில்வே வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தக் கோரி ரயில்வே பயணிகள் அமைப்பினர் மற்றும் மாவட்ட தொழில்துறையினர் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

முன்னதாக அவருக்கு பிஜேபி மகளிர் அணித் தலைவரும், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான திருமதி வானதி ஸ்ரீனிவாசன், மாநில பொருளாளர் எஸ்.ஆர். சேகர் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பளித்தனர்.

<<<<>>>>

தீபாவளி தொடர் விடுமுறையை அடுத்து சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்கள் பலரும் ஒரே நேரத்தில் சென்னை திரும்பியதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தென் மாவட்டங்களில் இருந்து அரசு, தனியார் பேருந்துகள், சொந்த வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் லட்சக்கணக்கானோர் நேற்று மாலை சென்னையை நோக்கி வந்ததால், சென்னையின் நுழைவு வாயிலான பரனூர் சுங்கச்சாவடி, வண்டலூர், கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், பெருங்களத்தூர், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நான்கு கிலோ மீட்டர் வரை வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

நெரிசலைக் குறைக்கும் விதத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போக்குவரத்து காவலர்கள் பணியில் ஈடுபட்டு போக்குவரத்து நெரிசலை சரிசெய்தனர்.

இதற்கிடையே விழுப்புரம் நெடுஞ்சாலை, உளுந்தூர்பேட்டை சுங்கச்வாடி, கன்னியாகுமரி, மதுரை ஆகிய ஊர்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை முடித்து பயணிகள் சென்னை திரும்ப வசதியாக சிறப்பு முன்பதிவில்லா ரயில்களை இயக்கியதற்கும், மதுரையில் இருந்து சென்னைக்கு முதல் முறையாக கழிப்பறை வசதியுடன் கூடிய புறநகர் மின்சார ரயில் சேவையை இயக்கியதற்கும் மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

வழக்கமான இரண்டாம் வகுப்பு முன்பதிவில்லா **MEMU** என்று அழைக்கப்படும் **Main Line Electric Multiple Unit** ரயில் இயக்கப்பட்டது தங்களுக்கு வசதியாக இருந்ததாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ரயில் சோழவந்தான், திண்டுக்கல், மணப்பாறை, திருச்சி, ஸ்ரீரங்கம், அரியலூர், விருத்தாச்சலம், விழுப்புரம், செங்கல்பட்டு ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் வகையில் இயக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கானோர் இந்த ரயிலைப் பயன்படுத்தினர்.

பயணிகளின் தேவை அறிந்து சேவை செய்த தெற்கு ரயில்வேக்கு பலரும் நன்றி தெரிவித்தனர்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவை விலக்கிக்கொள்ள இன்று கடைசி நாளாகும்.

மொத்தமுள்ள 288 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில் 7 ஆயிரத்து 994 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் வரும் 20ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

பிஜேபி, காங்கிரஸ், சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகிய முக்கிய கட்சிகளுக்கிடையே போட்டி நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவையின் புதிய அவைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக சட்டப்பேரவை இன்று காலை கூடுகிறது.

தேசிய மாநாட்டுக் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு. அப்துல் ரஹீம் ரத்தர், சட்டப்பேரவைத் தலைவர் பதவிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை மணி 10.30க்கு அவை கூடியவுடன் முதலாவதாக சட்டப்பேரவைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்வு நடைபெறுகிறது.

இவருக்கு ஆதரவாக தேசிய மாநாட்டு கட்சியின் 41 உறுப்பினர்கள், காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு 29 உறுப்பினர்களைக் கொண்ட பிஜேபியின் திரு. நரேந்திர சிங் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது.

இந்த நிகழ்வுக்குப் பிறகு மணி 11.30க்கு கூடும் அவையின் முதல் கூட்டத்தில் அம்மாநில துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா உரையாற்றுகிறார்.

<<<<>>>>

தில்லியில் காற்றுமாசின் அளவு அதிகரித்துள்ளது. இது 381 என்ற அளவில் இருந்ததாகவும், சில பகுதிகளில் 432, 400 என்ற அளவுகளில் இருந்ததாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆனந்த்விஹார் பகுதியில் 426, ரோஹினியில் 432, பஞ்சாபி பாக் பகுதியில் 424 என்ற அளவுகளில் காற்றில் மாசுபாடு இருந்ததாக அந்த மையம் கூறியுள்ளது.

அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு பனியுடன் கூடிய காற்று மாசு காணப்படும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஹரியானாவில் விவசாயக் கழிவுகளை தீயிட்டு எரிக்க வேண்டாம் என்று அம்மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. ஷியாம்சிங் ரானா விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன்மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

ஒருபக்கம் பயிர்க்கழிவுகளை தீயிட்டு எரிப்பதை தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், மற்றொரு பக்கம் பயிர்க் கழிவுகளை பல்வேறு முறைகளில் மறுசுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக ஈமநில வேளாண்துறை அலுவலர்கள் விவசாயிகளிடம் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கரும்பு விவசாய கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கை எரிவாயு தயாரிப்பதற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 17 மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை இன்று அதிகாலை முதல் லேசான மழை பெய்து வருகிறது.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கனமழை பெய்து வருவதால் அங்குள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி இன்று சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

வரும் 16ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் 31 அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கான காலிறுதிப் போட்டி நவம்பர் 13ஆம் தேதி நடைபெறுகிறது.

இன்று நடைபெறும் முதலாவது லீக் போட்டியில் உத்தரப்பிரதேசம் - கேரளா அணிகள் மோதுகின்றன.

<<<<>>>>